பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
19 04 2025 **SATURDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக வரும் 22ஆம் தேதி சவுதி அரேபியா செல்கிறார்.
- மருந்து ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 9 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- சிறு விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
- **Congo**-வில் படகு தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 148 பேர் உயிரிழந்தனர்.
- ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Himansu Jakhar** தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக வரும் 22ஆம் தேதி சவுதி அரேபியா செல்கிறார்.

சவுதி அரேபியாவின் பிரதமரும், இளவரசருமான திரு. **Mohammed Bin Salman** அழைப்பின் பேரில் பிரதமர் இந்த பயணத்தை மேற்கொள்வதாக வெளியுறவுத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

மருந்து ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டில் மருந்து ஏற்றுமதி 9 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளில் அதிக அளவு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சிறு விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

பிரேஸில் நடைபெற்ற பிரிக்ஸ் வேளாண் அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதனை கருத்தில் கொண்டு தான் சிறு விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

<<<<<>>>>>

திமுக மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) 38 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி பெரிய அளவில் வெற்றிபெறும் என்றும் திரு. எல். முருகன் நம்பிக்கை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 23 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

**JEE** பிரதான தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

24 பேர் 100 சதவீத மதிப்பெண்களை பெற்றுள்ளதாக தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை கொண்ட மாநிலங்களின் பட்டியலில் ராஜஸ்தான் முதலிடத்தை பிடித்தது.

இதனைத் தொடர்ந்து மகாராஷ்ட்ரா, மேற்குவங்கம், உத்தரபிரதேசம் மற்றும் தெலங்கானா மாநிலங்கள் அந்த பட்டியலில் இடம்பெறுள்ளனர்.

<<<<<>>>>>

தில்லியில் ஆறு மாடி கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

**Mustafabad** பகுதியில் இன்று அதிகாலை இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இடிபாடுகளுக்கு இடையே எட்டுக்கு மேற்பட்டோர் சிக்கியிருப்பதாகவும் அவர்களை மீட்கும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தில்லி காவல்துறையினருடன் இணைந்து மீட்புப பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<>>>>>

நாட்டின் முதலாவது செயற்கைக்கோள் ஆர்யபட்டா விண்ணில் செலுத்தப்பட்ட 50வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1975-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதேநாளில் இஸ்ரோ உருவாக்கிய இந்த செயற்கைக்கோள் ரஷ்யாவிலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் திரு. த.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - த.வி. வெங்கடேஸ்வரன் 45 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

உலக கல்லீரல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, கல்லீரல் நோய் பாதிப்பை தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு உணவே மருந்து என்பதை மையக் கருத்தாக கொண்டு இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

<<<<<>>>>>

தமிழகத்தில், சென்னை கடற்கரை – செங்கல்பட்டு இடையே முதல்முறையாக குளிர்சாதன வசதியுடன் கூடிய புறநகர் ரயில் சேவை இன்று தொடங்கியது.

இன்றுகாலை 7 மணிக்கு கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட இந்த குளிர்சாதன வசதியுடன் கூடிய ரயில், எட்டரை மணிக்கு செங்கல்பட்டு ரயில்நிலையம் வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட – சுரேகா 45 செகண்ட்ஸ்)

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்த குளிர்சாதன வசதியுடன் கூடிய ரயில்சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று பயணிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயணிகள் 45 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

**Congo**-வில் படகு தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 148 பேர் உயிரிழந்தனர்.

500 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இந்த படகில் தீ விபத்து ஏற்பட்டு அதன்பின்னர் மூழ்கியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படகில் உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோது இந்த தீ விபத்து நேரிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

சவுதி அரேபியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் **Himansu Jakhar** தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

ஆடவர் தொடர் ஓட்டத்தில் இந்தியாவுக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

ஆடவர் உயரம் தாண்டுதலில் **Devak Bhusan** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளி, ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**<<<<<>>>>>**